நடைபெற்று வருகின்றன. அதேபோல, பெரம்பூர், வியாசர்பாடி மற்றும் மாதவரம் பகுதிகளில் மட்டும் 9.5 கி.மீ. உயர் அழுத்த மின் கம்பிகளும், 150 கி.மீ. தாழ்வழுத்த மின் கம்பிகளும் ரூ.22.35 கோடி செலவில் புதைவடங்களாக மாற்றும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இதில் ஏற்கெனவே 2.88 கி.மீ. உயர் அழுத்த மின் கம்பிகளும், 6 கி.மீ. தாழ்வழுத்த மின் கம்பிகளும் புதைவடங்களாக மாற்றப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, இந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதிலே காலதாமதம் ஆவதற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். மாநகராட்சியிலும், போக்குவரத்துக் காவல் துறையிலும் அனுமதி பெற்றுதான் மின் வாரியம் நிலத்தைத் தோண்டவேண்டும். மாநகராட்சியிலும், போக்குவரத்துக் காவல் துறையிலும் அனுமதி பெறுவதில்தான் சற்று காலதாமதமாகிறது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டதற்கு இதுதான் காரணம். ஆகவே, சம்பந்தப்பட்ட மாநகராட்சி அதிகாரிகளிடமும், போக்குவரத்துக் காவல் துறை அதிகாரிகளிடமும் அவ்வப்போது நானே தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசி வருகிறேன். விரைவில் அனுமதியைப் பெற்று, புதைவடம் பதிக்கின்ற பணிகளை விரைவுபடுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைவாக மேற்கொண்டுவருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 319, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

319—

மாவட்ட இதர சாலையைச் சீரமைத்தல்

***56611—திரு. மு. திராவிடமணி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், ஓவேலி பேரூராட்சி, சீப்புரத்திலிருந்து பெரியசோலை வரையிலான மாவட்ட இதர சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், ஓவேலி பேரூராட்சிக்குட்பட்ட மாவட்ட இதர சாலையான, சீப்புரத்திலிருந்து பெரியசோலை வரையுள்ள சாலைப் பகுதியானது வனப் பகுதிக்குட்பட்டதால், வனத் துறையின் அனுமதி பெற்றபின் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓவேலி பேரூராட்சியின் மொத்த மக்கள்தொகை 20,000–க்கு மேல் ஆகும். அங்கு 18 வார்டுகள் உள்ளன. மேலும், 65 குக்கிராமங்கள் உள்ளன. அப்பேரூராட்சி 108 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாக உள்ளது. இங்கு ஒரு மேல்நிலைப் பள்ளியும், 3 உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. 5 மாவட்ட இதர சாலைகள் உள்ளன. கூடலூரிலிருந்து ஓவேலி வரை ஒரு சாலையும், சீப்புரத்திலிருந்து பெரியசோலை வரை ஒரு சாலையும், ஆரோட்டுப்பாறை சாலை,* Sand Hill *சாலை மற்றும் இணைப்புச் சாலை, ஆக மொத்தம் 5 சாலைகள் உள்ளன. அந்த 5 சாலைகளின் மொத்த தூரம் 35 கிலோ மீட்டராகும். அதில், 9 கிலோ மீட்டர் சாலைதான் சீரமைக்கப்பட்டிருக்கிறது. மீதி சாலைகள் சீரமைக்கப்படவில்லை. இதற்குக் காரணம், இந்த இடம்* Tamil Nadu Preservation of Private Forests Act*–ன்கீழ் வருவதால், வனத் துறையின் அனுமதி கோரியிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், இது தவறான முன்னுதாரணமாகத் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது.* Forest Department's Environmental Extremism is rampant in the area *என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் அங்கு வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்படுகின்றன.*

2015 செப்டம்பர் 22]

T.N.P.P.F. Act, Section 3, Clause (1)–ல் "not exceeding two hectares" 2 எக்டேருக்குமேல் உள்ள இயற்கையாக அமையப்பெற்ற பகுதிகளுக்கு மட்டும்தான் T.N.P.P.F. Act–ஐ அமல்படுத்த முடியும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதைத் தவறான முன்னுதாரணமாகக் கொண்டு, அனுமதி கோரி வருவதாகச் சொல்கிறார்கள். ஆகவே, அந்த இடத்தில் வனத் துறையின் அனுமதி தேவையில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 1969, Janmam Abolition Act கொண்டுவரப்பட்ட பிறகு, இதுசம்பந்தமான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது. உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. மு. திராவிடமணி: சில விளக்கங்கள் சொன்னால்தான் இதில் தெளிவாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி, விளக்கம் சொல்லி நீங்கள் இதை விவாதமாக்கவேண்டாம். (குறுக்கீடு) கேள்வி கேளுங்கள்.

திரு. மு. திராவிடமணி: கேள்வியைக் கேட்கிறேன். 1969–ல் Janmam Abolition Act வந்தபிறகு, இதுகுறித்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் 1974 முதல் நிலுவையில் இருந்தது. இந்த வழக்கில் 10–9–2010 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்தத் தீர்ப்பில் Government is the land owner, Forest Department is the custodian of the land என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவ்வாறு custodian–ஆக வனத் துறை இருக்கும்பொழுது, அனுமதி பெறத் தேவையில்லை. ஆகவே, வனத் துறையின் அனுமதி பெறாமலேயே இந்தப் பணியைச் செய்யலாம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும். 202 Act–ஐத் தவறாக interpret செய்கின்ற காரணத்தால்தான், இந்தப் பிரச்சினையே ஏற்படுகின்றது. ஆகவே, இந்த நிலம் முழுமையாக அரசுக்குச் சொந்தமானது. வனத் துறை என்பது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே வருகிறது. எனவே, வனத் துறையின் அனுமதி தேவையில்லை என்றுதான் சட்டம் சொல்கிறது. ஆகவே, இதுகுறித்து மறுபரிசீலனை செய்து, அந்தச் சாலையைச் சீரமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், ஓவேலி பேரூராட்சிக்குட்பட்ட சீப்புரத்திலிருந்து பெரியசோலை வரையுள்ள மாவட்ட இதர சாலையானது நெடுஞ்சாலைத் துறையின் கூடலூர் கட்டுமான மற்றும் பராமரிப்பு உட்கோட்டத்திற்குட்பட்ட* L.N. *எல்லைமலை பெரியசோலை சாலையில் 11/525 கிலோ மீட்டரிலிருந்து 17/0 வரை அமைந்துள்ள பகுதியாகும். இப்பகுதி வனத் துறைக்குட்பட்ட பகுதியாக இருப்பதால், உச்ச நீதிமன்றத்தின்* Central Empowered Committee *யிடம் சிறப்பு முன்மொழிவு தாக்கல் செய்யப்பட்டு, உரிய அனுமதியைப் பெற்ற பின்புதான் சாலைப் பணிகளைச் செய்ய இயலும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீப்புரம் முதல் பெரியசோலை வரையுள்ள சாலையைச் சீரமைக்க இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விழைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு* CRIDP *திட்டத்தின் மூலமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், வனத் துறையின் அனுமதி கிடைக்காத காரணத்தினால், அந்தப் பணிகளைச் செய்ய முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் தொகுதியில் சில சாலைகளைக் குறிப்பிட்டு, அந்தச் சாலைகளெல்லாம் சீர்செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 4 ஆண்டு பொற்கால ஆட்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் மட்டும் 134.70 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் 84.01 கோடி ரூபாய்*

2015 செப்டம்பர் 22]

செலவில் சீரமைக்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–20

அதுமட்டுமல்ல, 2015–2016-ல் அதாவது நடப்பாண்டில் 88.28 கிலோ மீட்டர் சாலைகளைச் சீரமைப்பதற்காக, 45.96 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆக மொத்தம், இந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் சீரமைக்கப்படவிருக்கின்ற 222.98 கிலோ மீட்டர் நீளச் சாலைகளுக்கு, 129.97 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசால் தொடரப்பட்ட ஒரு வழக்கு, உச்ச நீதிமன்றத்தில் நேற்றையதினம் விசாரணைக்கு வந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் தொடரப்பட்ட அந்த வழக்கு, 5 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல், ஆனைமலை, முதுமலை வனப் பகுதிகளில் சாலைகள் அமைப்பதற்கு, அங்கு புலிகள் காப்பகம் இருக்கின்ற காரணத்தினால், உச்ச நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றுதான், அந்தப் பகுதிகளில் சாலைகள் அமைக்க வேண்டிய சூழ்நிலைகள் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, reserve forest-க்கு உட்பட்ட அந்த ஏரியாவில் உள்ள சாலைகளைச் சீரமைப்பதற்கும், வனத் துறையின் அனுமதியைப் பெற வேண்டிய சூழ்நிலைகள் இருக்கின்ற காரணத்தினாலேதான், சாலைகள் அமைப்பதற்குக் காலதாமதம் ஏற்பட்டது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தச் சாலைகளைச் சீரமைப்பதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் அனைத்து வகைகளிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதி டி.அம்மாப்பேட்டையிலிருந்து நீப்பத்தூர் வரையில் உள்ள

சாலைகள் திருவண்ணாமலை மாவட்டம், செங்கத்தை இணைக்கின்ற ஒரு பகுதியாகும். சுமார் எட்டு கிலோ மீட்டர் தூரம் இரண்டு வழிச் சாலைகளாக அதனைச் சீரமைத்தால், பக்கத்து மாவட்டத்திற்குச் செல்ல 20 கிலோ மீட்டர் தூரம் குறைவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அந்தச் சாலைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீரமைத்துத் தருவார்களா என்பதையும், அதேபோல், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, ஒரு துணைக் கேள்வி மட்டும்தான் நீங்கள் கேட்கவேண்டும். போதும், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள் 8 கிலோ மீட்டர் சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்த வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடந்த நான்காண்டு பொற்கால ஆட்சியில் 7,233.86 கிலோ மீட்டர் சாலைகள் அகலப்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடப்பு 2015–2016–ல், 1,560 கிலோ மீட்டர் சாலைகளை அகலப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க மாண்புமிகு அம்மா அவர்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தச் சாலையில் போக்குவரத்து செறிவினை ஆய்வு செய்து, அதன் அடிப்படையில், அங்கு அதிகமான போக்குவரத்து செறிவு இருக்கும்பட்சத்தில், நிதிநிலைமைக்கேற்ப அந்தச் சாலைகளை அகலப்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 320, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.